**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.**

Original Suit : **OS** 68/2013 ⎫ Plaintiff : PW
Deposition of Witness of ⎭ Defendant: DW .5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. சீனிவாசன் | District | : | |
| Father/ Husband name | : | திரு. மகாலிங்கம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 07.04.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மதுரை வருமான வரித்துறை அலுவலகத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து கோயம்புத்தூர் வருமான வரித்துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் மேற்படி அழைப்பாணையில் கேட்கப்பட்ட சாம்பவிகா கல்வி அறக்கட்டளை சம்மந்தமான வருமான வரி வரம்பு 5 கோடிக்கு கீழ் என்பதால் மேற்படி நபரின் பான் நம்பரானது எங்களது அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட எங்களது அலுவலகமே மேற்படி நடவடிக்கைக்கான அதிகார வரம்பு கொண்டுள்ளது, அதனடிப்படையில் அழைப்பாணையில் கோரப்பட்ட சங்கதி குறித்து சாட்சியமளிக்க எங்களது அலுவலகத்திலிருந்து எனக்கு கொடுத்த அனுமதி கடிதத்தின் பெயரில் சாட்சியமளிக்கிறேன். மேற்படி அனுமதி கடிதம் **சா.சா.ஆ.9** ஆகும். அழைப்பாணையில் கேட்கப்பட்ட வருடம் 2000 முதல் 2026 வரையிலான சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் வருமான வரி ரிட்டன் குறித்த ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேனா என்றால் 2013 – 2014 கணக்கீட்டு ஆண்டுகளிலிருந்து நடப்பு ஆண்டு வரை E-Filing முறையில் வருமான வரி ரிட்டன் செலுத்தி வருகிறார்கள். அதற்கு முந்தைய வருடங்களில் E-Filing நடைமுறை இல்லை என்பதாலும் Manual ஆக வருமான வரி ரிட்டன் செலுத்தி வந்ததால் காரைக்குடி, கோயம்புத்தூர், மதுரை

சம்மந்தப்பட்ட மேற்படி ஆவணங்கள் தேடி பார்த்தும் கண்டு பிடிக்க இயலவில்லை, ஆகவே E-Filing நடைமுறையில் மேற்படி அறக்கட்டளை தாக்கல் செய்த ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 2019 – 2020 கணக்கீட்டு ஆண்டுக்கு வருமான வரிக்கான ரிவைஸ்டு கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டுக்கு மட்டும் 2 ஆவணங்கள் உள்ளது. மேற்படி 2013 – 2014, 2014 – 2015, 2015 – 2016, 2016 – 2017, 2017 – 2018, 2018 – 2019, 2019 – 2020, 2020 – 2021, 2021 – 2022, 2022 – 2023, 2023 – 2024, 2024 – 2025, 2025 – 2026 ஆண்டுகளுக்கான ஆவணங்கள் **சா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.சா.ஆ.10-ல் வருமான வரித்துறை அலுவலரான எம்.கருணாநிதி என்பவர் சான்று கையொப்பம் செய்துள்ளார். மேற்படி சா.சா.ஆ.10 எங்களது வருமான வரித்துறை அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 2013 ஆண்டிற்கு முன்புள்ள ஆவணங்கள் எங்கு தற்போது இருக்கும் என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

**குறுக்கு விசாரணை**:

சாம்பவிகா அறக்கட்டளை தனிநபர் பெயரில் உள்ளதா அல்லது டிரஸ்ட் பெயரில் உள்ளதா என்றால் டிரஸ்ட் பெயரில் தான் உள்ளது. சாம்பவிகா அறக்கட்டளைக்கான பான் நம்பர் சா.சா.ஆ.10ல் உள்ளதா என்றால் AAJTS5793D என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பான் நம்பரானது தனிநபர் பெயரில் இல்லை என்றால் சரிதான். மேற்படி பான் நம்பர் தான் 2013 வருடத்திற்கு முந்தைய வருடங்களிலும் உள்ள நம்பராகும் என்றால் சரிதான். சாம்பவிகா அறக்கட்டளைக்கு வருமான வரி விலக்கு உள்ளதா என்றால் 2019 வருடத்திற்கு பிறகு இருக்குமென நினைக்கிறேன், ஆவணங்களை பார்த்தால் சொல்ல முடியும். சாம்பவிகா அறக்கட்டளை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி ரிட்டனில் வருமானம் என்பது எந்த இனங்களை சார்ந்தது என விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தனித்தனியாக குறிப்பிடப்படாமல் மொத்தமாக வருவாய் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கணக்கில் செலவினங்கள் எந்த இனங்கள் என சொல்லப்பட்டுள்ளதா என்றால் தனித்தனியாக செலவினங்களுக்கான இனங்கள் குறிப்பிடாமல் கல்வி நோக்கத்திற்காக என குறிப்பிடப்பட்டுள்ளது. வருமான வரி ரிட்டனுக்கான வரவு செலவு விவரங்களை அறிந்து கொள்ள சா.சா.ஆ.10 போதுமானதா என்றால் வருமான வரி ரிட்டனுக்கு போதுமானது ஆகும். அதன் தனித்தனியான விவரங்கள் அறிந்து கொள்ள மேற்படி அறக்கட்டளையின் Account பதிவேடுகளை தான் பார்க்க வேண்டும். சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு டிரஸ்டீ யார் என்றால் 2013 – 2014

ஆண்டிற்கு ஏ.எம். சேகர், எஸ்.ராணி, எஸ்.பார்த்திபன், எஸ்.கார்த்திகேயன் ஆகிய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நபர்கள் தான் நடப்பு ஆண்டு வரை உள்ளார்கள். 2013 – 2014 வருடத்திற்கான வருமான வரி ரிட்டன் எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 27.03.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கணக்கீடு ஆனது 4 வருட கால தாமதத்திற்கு பிறகே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 முதல் 2018 வரையிலான 4 வருட கணக்கீட்டு காலங்களுக்கான வருமான வரி ரிட்டன் மேற்சொன்ன 27.03.2018ம் தேதியன்று தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் 2013 – 2014, 2014 – 2015 ஆகிய வருடங்களுக்கு 27.03.2018ம் தேதியும், 2015 – 2016, 2016 – 2017 ஆகிய ஆண்டுக்கு 16.11.2018ம் தேதியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2017 – 2018 க்கு 29.03.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கால தாமதமாக வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்வதற்கு அபராதம் விதிக்கப்படுமா என்றால் ரூ. 5000 அபராதமாக விதிக்கப்படும். மேற்படி கால தாமதமாக வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ததால் அறக்கட்டளை மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுமா என்றால் இல்லை. மேற்படி கால தாமதமாக வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்யும் போது விதி விலக்கு கோரும் தொகைக்கு விதி விலக்கு அளிக்கப்படாது. அவ்வாறு விதி விலக்கு மறுக்கப்படும் உத்தரவிற்கு எதிராக மேல்முறையீட்டு செய்யப்பட்டு விசாரணை நடைபெறும். மேற்படி மேல்முறையீட்டானது எங்களது மேல் அதிகாரியிடம் செய்யப்படுமா என்றால் ஆமாம். மேற்படி விதி விலக்கு மறுக்கப்பட்டதற்கு மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் மேல் முறையீடு உள்ளது, ஆவணங்களை பார்த்தால் சொல்ல முடியும். மேற்படி வருமான வரி ரிட்டன் ஆடிட்டர் அறிக்கையும் தாக்கல் செய்யப்படுமா என்றால் தாக்கல் செய்யப்படும். மேற்படி ஆடிட்டர் அறிக்கை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. ஆடிட்டர் அறிக்கை டிரஸ்டீகள் கையெழுத்து செய்வார்களா என்றால் ஆடிட்டர் கையெழுத்து செய்வார். டிரஸ்டீகளுடைய ஒப்புதல் பெற்று தான் வரவு செலவு கணக்குகள் ஆடிட்டரிடம் அனுப்பி வைக்கப்படும் என்றால் சரிதான். டிரஸ்டி அறிக்கை இல்லாமலும் உண்மையான டிரஸ்டீகளின் ஒப்புதல் இல்லாமலும் வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருமான வரி கணக்கு தாக்கல் செய்தது குறித்து ஏ.எம். சேகர் வீட்டிலும் அவர் சம்மந்தப்பட்ட இடங்களிலும் வருமான வரி சோதனை ஏன் நடத்தப்பட்டது என்றால் எங்கள் அலுவலகம் நடத்தவில்லை, கோயம்புத்தூர் அலுவலகம் நடத்தி இருக்கலாம். 2000 முதல் 2013 வருடம்

வரையிலான சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கான வருமான வரி ரிட்டன் விவரங்களை மறைத்து அதன் பிறகுள்ள ஆண்டுகளுக்கான வருமான வரி ரிட்டன் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக 2013 வருடத்திற்கு பிறகுள்ள ஆவணங்களை தாக்கல் செய்தும் அதற்கு முந்தைய வருடத்திற்கு உள்ள ஆவணங்களை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.07 16:05:59 +0530